වර්ණාවලිය வானவில்

# SPECTRUM






## உள்ளடக்கமும் தூண்டுதல் எச்சரிக்கையும்

இந்த சித்திரக்கதை ஓரினச்சேர்க்கை, ஈரினச் சேர்க்கை என்பவற்றின் மீது அச்சம் கொண்டவர்களையும் வன்முறை மனப்பான்மைகளை சித்தரிக்கும் உள்ளடக்கத்தையும் கொண்டுள்ளது. மேலும் இது சிலருக்கு வாசிப்பதற்குச் சவாலாக இருக்கலாம்.

## நன்றியுரை

எம்முடன் தமது கதைகளைத் துணிவுடன் பகிர்ந்துகொண்ட LGBTI மக்களுக்கும் தமதும் தாம் அன்புசெலுத்துவோரதும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இருந்த போதிலும், இலங்கையில் இம்மக்களின் உரிமைக்காக அயராது உழைக்கின்ற நிறுவனங்களுக்கும் சர்வதேச மன்னிப்புச் சபை தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றது.

பூமி ஹரேந்திரன், தமித் சந்திமல், EQUAL GROUND, iProbono , நெஹாமா ஜயவர்தன, திலானி சமரசிங்க என்பவர்களுடன் இந்த 'வானவில்' பதிப்பிற்காகத் தமது பங்களிப்பினைச் செய்த அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

© Amnesty International 2019
Except where otherwise noted, content in this document is licensed under a Creative Commons (attribution, non-commercial, no derivatives, international 4.0) licence.
https://creativecommons.org/licenses/by-nc-nd/4.0/legalcode
For more information please visit the permissions page on our website: www.amnesty.org
Where material is attributed to a copyright owner other than Amnesty International this material is not subject to the Creative Commons licence.

First published in 2019
by Amnesty International Ltd
Peter Benenson House, 1 Easton Street
London WC1X 0DW, UK

**Index: ASA 37/1477/2019**
**Original language: Tamil**

**amnesty.org**

***Cover artwork and chapters: :***
Chapter 1- Manju: Gimhani Galagedera
Chapter 2- Kiruthika: Madhri Samaranayake
Chapter 3- Thenu: Shenuka Corea
Chapter 4-Samanali: Akiel Surajdeen

## அறிமுகம்:

இலங்கைத் தீவினைக் கைப்பற்றிய ஆங்கிலேயர், 1833ம் ஆண்டு குற்றங்களைக் கையாள்வது தொடர்பான ஒரு சட்டத்தை இயற்றினர். இது குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவை (1) என அழைக்கப்படுகின்றது. 'குற்றம்' எனக் கருதப்பட்ட எல்லாச் செயற்பாடுகளையும் இச்சட்டம் அடையாளம் கண்டது. இதில் குறிப்பிடப்பட்ட சில தடைகள், பிரிவு 365, 365A போன்றன, இக்கோவை அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் சட்டத்தில் இருக்கவில்லை. இவ்விரு பிரிவுகளும் இயற்கைக்கு முரணான உடலுறவு (2), பாலியல் அநாகரீகம் (3) என்பவற்றைத் தடை செய்தன. இவை என்னவென்று குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவை ஒரு குறிப்பான விளக்கத்தை அளிக்கவில்லை. அளவுக்கு மீறிப் பரந்துபட்ட, 136 வருடங்கள் பழமையான இக் குடியேற்றவாதச் சட்டங்கள், தன்னினச் சேர்க்கையில் ஈடுபடும் ஆண்கள் (Gay), பெண்கள் (Lesbians), இருபால் சேர்க்கையாளர்கள், திருநங்கையர் அல்லது இடைப்பாலினர் (LGBTI) எனத் தம்மை அடையாளம் காண்போரையோ அல்லது அவ்வாறு சந்தேகிக்கப்படுவோரையோ குறி வைப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையின் 399ம் (4) பிரிவு, 'ஆள்மாறாட்டத்தின் மூலம் மோசடி' என்பதனைத் தடைசெய்கின்றது. பிறறொருவரைப் போன்று பாசாங்கு செய்தல் அல்லது தான் பிறரொருவர் என ஒருவரிடம் கூறுதல் என இது பொருள்படும். இவர்கள் தாம் பிறிதொரு பாலினத்தைச் சேர்ந்தோர் எனப் பாசாங்கு செய்வதாகக் குற்றம் சாட்டப்பட்டு, LGBTI குழுவினரை, குறிப்பாக திருநங்கையர்களை, குறிவைப்பதற்கு இச் சட்டம் பயன்படுத்தப்படுகின்றது.

1841ல் பிரித்தானியரால் அறிமுகம் செய்யப்பட்ட அலைந்துதிரிதல் கட்டளைச் சட்டமும் (5) 'ஒழுங்கு முறையின்றி' (6) நடந்துகொள்பவர்களைத் தண்டிக்கின்றது. இது பிச்சை எடுப்போர் (7), அல்லது பாலியல் தொழிலில் ஈடுபடுவோர் (சட்டத்தில் 'விபச்சாரம்' என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது) (8), இவற்றுக்கு மேலாக, மிரட்டுவோர் அல்லது எரிச்சலூட்டுவோர்(9) என்போரையும் உள்ளடக்கும். இந்த 178 வருடங்கள் பழமையான சட்டம், LGBTI குழுவினரை அளவுக்கு மீறி குறி வைப்பதுடன், இவர்களைக் கைது செய்வதற்கும் சிறையில் இடுவதற்கும் கூட பொலிஸாருக்கு அனுமதி அளிக்கின்றது.

பிரித்தானியாவின் இக்குடியேற்றவாத சட்டங்கள், இலங்கையின் சட்ட முறைமையில் ஒரு பகுதியாக இருந்த போதிலும், இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையுடன் நாடுகளுக்கு இடையிலான ஒப்பந்தங்கள் (Treaties) என அழைக்கப்படும் ஒப்பந்தங்களைச் செய்துள்ளது. இலங்கை செய்துகொண்டுள்ள சில ஒப்பந்தங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச கூட்டு ஒப்பந்தம் (ICCPR), இது பிரசைகளின் குடியியல், அரசியல் உரிமைகளை பாதுகாப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் தொடர்பான சர்வதேச கூட்டு ஒப்பந்தம் (ICESCR), இது பிரசைகள் யாவரினதும் பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளைப் பாதுகாப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. பெண்களுக்கு எதிரான எல்லா வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான கூட்டு ஒப்பந்தம் (CEDAW), இது பெண்களையும் சிறுமிகளையும் பாதுகாப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இச் சர்வதேசப் பட்டயங்கள் எல்லா தனி நபர்களுக்கும் சமமாகப் பிரயோகிக்கப்பட வேண்டும் அவர்களது பாலியல் விருப்பு (அவர்கள் யாரால் கவரப்படுகின்றார்கள்), பிறப்பில் அவர்கள் பெற்றிருந்த பால்நிலையைக் கவனத்தில் கொள்ளாது பாலின அடையாளம் (அவர்கள் தம்மை எவ்வாறு வரைவிலக்கணம் செய்கின்றார்கள்) என்பவற்றின் காரணமாக பாகுபாடு காட்டக் கூடாது என்பதே இதன் பொருளாகும். இப் பட்டயங்களில் கைச்சாத்திடுவதன் மூலம் இலங்கை அரசாங்கம், LGBTI குழுவினர் உட்பட்ட எல்லாப் பிரசைகளினதும் உரிமைகளைப் பாதுகாத்துப் பேணுவதற்கும் அவர்களது பால்சார் விருப்புடன் அல்லது பால்நிலை அடையாளம் என்பவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கும் உறுதிமொழி அளித்துள்ளது.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர், 1978ம் ஆண்டு முதல் தடவை அறிமுகம் செய்யப்பட்ட அரசியலமைப்பு (10), முக்கியமான 'அடிப்படை உரிமைகள்' (11) நாட்டில் யாவருக்கும் பிரயோகிக்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றது. அரசியலமைப்பு இலங்கையின் அதிஉயர் சட்டம் என்பதனால், இவ்வுரிமைகள் யாவராலும் கட்டாயமாகப் பின்பற்றப்பட வேண்டும். சில அடிப்படை உரிமைகள் பின்வருமாறு: சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சி, சமயம் தொடர்பான உரிமை, (12) சித்திரவதை செய்யப்படாமல் இருப்பதற்கான உரிமை (13), காரணமின்றிக் கைதுசெய்யப்படாமல் இருப்பதற்கான உரிமை (14), பேச்சுச் சுதந்திர உரிமை, எவருடனும் ஒன்றுகூடுவதற்கான உரிமை(15).

மக்கள் யாவருக்கும் சமத்துவம் தொடர்பிலான உரிமை உண்டு என அரசியலமைப்பின் 12வது உறுப்புரை வாக்குறுதி அளிக்கின்றது. 'இனம், மதம், மொழி, சாதி, அரசியல் கருத்து, பிறந்த இடம்' (15) என்பவற்றின் அடிப்படையில் எவருக்கும் பாகுபாடு காட்டப்படக் கூடாது என்பதே இதன் கருத்தாகும். பாலியல் விருப்பு, பாலின அடையாளம் (16) என்பவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டுவது 12வது உறுப்புரையின் கீழ் தடை செய்யப்பட்டிருப்பதாக இலங்கை அரசாங்கம், 2014ம் ஆண்டு ஐ.நா. சபையின் (17) முன்னர் உறுதிப்படுத்தியது. ஆகையால், இலங்கையினதும் சர்வதேச சட்டத்தினதும் கீழ், ஒருவர் LGBTI குழுவைச் சேர்ந்தவர் என்பதற்காக பாகுபாடு காட்டப்படக் கூடாது என்பதுடன், இலங்கையில் வாழுகின்ற ஏனையோரைப் போன்று LGBTI மக்களுக்கும் சமமான உரிமைகளும் பாதுகாப்பும் உண்டு.



மக்களின் பாலியல் நோக்கு அல்லது பால்நிலை அடையாளம் என்பவற்றின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டுவதற்கு சட்டங்கள் பயன்படுத்தப்படாமை தொடர்பில் தன்னை அர்ப்பணிப்பதாக 2017ம் ஆண்டு நடைபெற்ற ஐ. நா. மூன்றாவது சர்வதேச பருவ மீளாய்வின் (Universal Periodic Review) போது இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்தியது(19). எனினும் துரதிஷ்டவசமாக, மக்களின் மெய்யான அல்லது உணர்ந்தறி பாலியல் நோக்கு, பால்நிலை அடையாளம் என்பவற்றின் அடிப்படையில் அவர்களைக் குறி வைப்பதற்கும் துன்புறுத்துவதற்கும் குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவை, அலைந்துதிரிதல் கட்டளைச் சட்டம் போன்ற சட்டங்கள் இன்னும் பயன்படுத்தப்படுகின்றன.

தாம் முகங்கொடுத்த பாகுபாடு, துன்புறுத்தல் என்பன தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபையுடன் கதைத்த LGBTI மக்கள் கூறிய கதைகளை இச்சித்திரப்படக் கதைப் புத்தகம் பயன்படுத்தி உள்ளது. தமது மெய்யான அல்லது உணர்ந்தறி பாலியல் விருப்பு அல்லது பாலின அடையாளம் என்பவற்றின் காரணமாகத் தாம் முகம் கொடுத்த துஷ்பிரயோகம், சட்ட மீறல்கள் என்பன ஒரு பாரிய அளவிலான பிரச்சினையின் ஒரு சிறு உதாரணத்தை மாத்திரமே காட்டுகின்றன.

இலங்கை அரசாங்கம் தனது அரசியலமைப்பைப் பின்பற்றுவதனை உறுதி செய்வதற்கும் சர்வதேச மனித உரிமைகள் தொடர்பாக அளித்துள்ள உறுதிமொழிகளுக்கு அமைய வாழ்வதனை உறுதிப்படுத்துவதற்கும் பின்வருவனவற்றை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்:

- மக்களின் மெய்யான அல்லது உணர்ந்தறி பாலியல் விருப்பு அல்லது பால்நிலை அடையாளம் காரணமாக அவர்கள் குறிவைக்கப்படுவதனைத் தவிர்ப்பதற்கு குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையிலிருந்து 365, 365A,399 பிரிவுகளை நீக்குதல்.

- இலங்கையின் சட்டங்களிலிருந்து அலைந்துதிரிதல் கட்டளைச் சட்டத்தை நீக்கவும் இவ்வாறு செய்தால், மெய்யான அல்லது உய்த்துணர்ந்த பாலியல் விருப்பு அல்லது பால்நிலை அடையாளம் என்பவற்றின் காரணமாக, இம்மக்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டுவதற்கு இதனைப் பயன்படுத்த முடியாதிருக்கும்.

- மக்களின் பாலியல் விருப்பு அல்லது பால்நிலை அடையாளம் என்பவற்றின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுவதட்கு வேறு சட்டங்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதனை உறுதி செய்யவும்.

- LGBTI மக்களுக்கு முழுமையான சட்டப் பாதுகாப்பு அளிக்கப்படுவதுடன், அவர்களின் மெய்யான அல்லது உய்த்துணர்ந்த பாலியல் விருப்பு, பால்நிலை அடையாளம் என்பவற்றின் காரணமாகப் பொலிஸாரினால் துன்புறுத்தப்படுதல், மிரட்டிப் பணம் பறித்தல் அல்லது துஷ்பிரயோகத்திற்கு உட்படுதல் என்பவற்றிலிருந்து பாதுகாக்கப்படுவதனை உறுதிப்படுத்தல்.
- மக்களின் மெய்யான அல்லது உய்த்துணர்ந்த பாலியல் விருப்பு அல்லது பால்நிலை அடையாளம் என்பவற்றின் காரணமாகப் பொது அல்லது தனி இடங்களில் அவர்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டுதல், துன்புறுத்தப்படுதல் அல்லது பலாத்காரத்திற்கு உட்படுத்தப்படுத்தல் என்பவற்றைத் தவிர்ப்பதனை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். இவை இடம்பெற்றால், இது தொடர்பாக முறைப்பாடுகளைச் செய்வதற்கும் அவற்றைப் பாதுகாப்பாக விசாரிப்பதற்கும் உரிய ஒரு பொறிமுறை உருவாக்கப்படுவதனை அரசாங்கம் உறுதி செய்யவேண்டும். எல்லா முறைப்பாடுகளும் முறையாக விசாரிக்கப்பட்டு, குற்றவாளிகள் தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

இலங்கை மக்கள் பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும்.

- எல்லா மக்களையும் உள்ளடக்கும் சூழலை உருவாக்கவேண்டும் மக்களின் மெய்யான அல்லது உய்த்துணர்ந்த பாலியல் விருப்பு அல்லது பால்நிலை அடையாளம் என்பவற்றின் காரணமாக எவரும் பாகுபாடு கட்டப்படவோ, துன்புறுத்தப்படவோ அல்லது துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படவோ கூடாது என்பதனை உறுதி செய்தல் வேண்டும்.

- LGBTI மக்களுடன் நட்பாக இருங்கள்.



அத்தியாயம் 01

# மஞ்சு



பாகம் 1




வெவ்வேறு நிறங்களுடைய நான்கு வானம்பாடி பறவைகள் நான்கு திசைகளிலிருந்தும் ஒன்றையொன்று நோக்கி பறந்தன.




* வெவ்வேறு சாதிகளைச் சேர்ந்த அனைத்து மனிதர்களும் சமமாக கருதப்படுகிறார்கள்






லொகு ஹாமுதுரு அவர்கள் உங்களுடன் பேச விரும்புகிறார்
சரி குழந்தைகளே இன்றைக்கு இது போதும். அடுத்த வாரம் உங்களைச் சந்திக்கின்றேன்.. தெருவன் சரனய்
தெருவன் சரனய்!
மஞ்சு, குழந்தைகள் உன்னை நேசிக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும்
ஆனால் சில பெற்றோர்கள் எங்கள் விகாரை அறநெறி பாடசாலையில் நீ கற்பிப்பதைத் நிறுத்தும்படி என்னைக் கேட்டுள்ளனர்.
ஏன் லொகு ஹாமுதுரு அவர்களே? என்ன நடந்தது?
அவர்களில் சிலர் உங்களை சிலருடன் பார்த்திருக்கிறார்கள்... அதாவது அவர்கள ஏற்றுக்கொள்ளாத நபர்களுடன்
அப்படியென்றால் என்ன லொகு ஹாமுதுரு அவர்களே?




பெண்களைப் போல நடந்துகொண்டு பெண்களைப் போல உடையணிந்த ஆண்கள் என்று அவர்கள் கூறினர்
லொகு ஹாமுதுரு அவர்களே நீங்கள் திருநங்கைகளையும் ஓரின சேர்க்கையாளர்களையுமா குறிப்பிடுகிறீர்கள்?
ஆம்.
“லொகு ஹாமுதுரு அவர்களே, நான் கல்வி கற்பிப்பதற்கும்ஏதேனும் உதவி புரிவதற்க்காகவுமே பலருடன் வேலை செய்கின்றேன்,
எங்கள் பெற்றோர்களுக்கு இவர்கள் வித்தியாசமாகத் தோன்றலாம், ஆனால் அவர்கள் எந்த தவறும் செய்யவில்லை.”
நான் புத்தரின் போதனைகளைப் பின்பற்ற முயற்சிக்கிறேன், அனைவரையும் சமமாக நடத்துகிறேன்,
நான் செய்தது மிகப் பெரிய தவறா?
மஞ்சு, குழந்தைகள் உன்னை நேசிக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும், ஆனால் நான் எதுவும் செய்யாவிட்டால், பெற்றோர் என் மீது குற்றம் சுமத்துவார்கள்.
என்னை மன்னிக்கவும்!
லொகு ஹாமுதுரு அவர்களே, உங்களுக்கோ அல்லது விகாரைக்கோ எந்த பிரச்சினையையும் ஏற்படுத்த நான் விரும்பவில்லை.
“நான் கிளம்புகின்றேன்.”






அத்தியாயம் 01

# மஞ்சு



பாகம் 2


எனக்கு உமது அறிமுக அட்டையைக் காட்டும்.
எங்கே போகின்றாய்?
நான் வீட்டுக்கு போகின்றேன் ஐயா. ஏன்?
உமது பையில் உள்ளதை எங்களுக்குக் காட்டும்
இது என்ன?
இது ஒரு ஆணுறை*
இதனை ஏன் வைத்திருக்கின்றாய்? நீர் ஒரு ஓரினச் சேர்க்கையாளனா?
ஆம்... ஏன்?
நாங்கள் உன்னை கைது செய்கின்றோம். வா எங்களுடன்
ஏன்? நான் என்ன செய்தேன்?
ஆணுறைகளுடன் இரவில் நீ தெருவில் நிற்கின்றாய்
அது தவறல்ல! அதற்காக என்னை கைது செய்ய முடியா. . .
வாயை மூடு!

[redacted]




மக்கள் என்னைப் பற்றி என்ன நினைக்கப் போகிறார்கள்? நான் ஏதோ தவறு செய்தேன் என்று அவர்கள் நினைப்பார்கள்.
நான் பாதுகாப்பான பாலியல் பழக்கவழக்கங்களைப் பற்றி மக்களுக்குக் கற்பிக்க முயற்சிக் கின்றேன்.
ஆணுறைகளை ஏன் பயன்படுத்த வேண்டும் என்பதைப் பற்றி மக்களுக்கு நாங்கள் கற்பிக்கின்றோம்,
HIV/STD
அத்தோடு ஆணுறைகள் இல்லாதபோது நாம் மக்களுக்கு அவற்றை வழங்குகின்றோம்.
ஆணுறைகள் பயன்படுத்தா விட்டால் மக்கள் மிகவும் நோய்வாய்ப்படைவர்
எனக்கு அது பற்றி அக்கறையில்லை
உன்னை போன்றவர்களைப் பற்றி எமக்குத் நன்றாகத் தெரியும்.
நான் ஓரினச் சேர்க்கையாளர்களுடன் மட்டுமல்லாமல், பலருடனும் வேலை செய்கிறேன். எப்படியிருந்தாலும், உங்களுக்கு என்னை பிடிக்காததற்க்காக் கைதுசெய்ய முடியாது.
போதும் நிறுத்து.






மக்கள் என்னைத் தவறாகப் புரிந்துகொண்டார்கள், தவறாக நடத்தினார்கள். இவர்கள் என்னை சமூகத்தில் உள்ளவர்களுக்கு உதவும் ஒரு நபராகப் பார்க்கவில்லை. நான யார்? நான் யாரை நேசிக்கின்றேன்? இவற்றை பார்த்தே, நான் தண்டிக்கப்பட வேண்டிய ஒருவன் என அவர்கள தீர்மானித்தார்கள்.




இலங்கை 1980 ஆம் ஆண்டில் ஐ.நா. சர்வதேச உடன்படிக்கையிலும் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையிலும் (ஐ.சி.சி.பி.ஆர்) கையெழுத்திட்டது. ஐ.சி.சி.பி.ஆர், வாழ்க்கைக்கான உரிமை, கருத்துச் சுதந்திரம், மத சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் போன்றவற்றின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்கினறது. சித்திரவதை, அடிமைத்தனம் மற்றும் நியாயமற்ற வகையில் கைதுசெய்தல் என்பவற்றயும் இது தடை செய்கின்றது. உடன்படிக்கையில் கையெழுத்திட்ட நாடுகள், இனம், நிறம், பாலினம் (பாலியல் நோக்குநிலை உள்ளடக்கியது), மொழி, மதம், அரசியல் அல்லது பிற கருத்து, தேசிய, அல்லது சமூக மூலம், சொத்து, பிறப்பு அல்லது வேறு எந்த அந்தஸ்த்தையும் கருத்தில் கொள்ளாது, உடன்படிக்கையில் உள்ள உரிமைகள் இலங்கையில் உள்ள அனைவருக்கும் செல்லுபடியாகும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

அத்தியாயம் 02

# கிருத்திகா








10.13
New Message
+ 94 83 1854491
BEEP
BEEP
நான் கிம்ஹானி, இது எனது தம்பியின் இலக்கத்தால் மெசேஜ் அனுப்புகின்றேன். அப்பாவுக்கு எங்களைப் பற்றி தெரிந்துவிட்டது. நாங்கள் அனுப்பிய மெசேஜ்களை வாசித்த பின் போனை என்னிடமிருந்து பறித்துவிட்டார். அவர் கடுங் கோபத்தில் இருக்கின்றார். எனது இலக்கத்திலிருந்து வருகின்ற ஒரு அழைப்புக்கும் நீ பதிலளிக்க வேண்டாம். அவருக்கு சில பொல்லாத மனிதர்களைத் தெரியும். நான் உனக்கு சந்தர்ப்பம் கிடைத்தவுடன் மீண்டும் மெசேஜ் அனுப்புவேன். கவனமாய் இரு.
!?!
இங்க ஒருக்காலும் மின்சாரம் தடைப்படுவது இல்லையே.... இது புதினமாக இருக்குது.
எங்கள் வீதிக்கு மட்டும் மின்சாரம் இல்லைப்போல தெரியுது..
BANG! BANG! BANG!
கேட்டைத் திற
STICK NO BILLS




ஆண்டி கீதா... பயங்கரமான தோற்றமுள்ள சிலபேர் கேற்றைத் தட்டிக்கொண்டு அவர்களை உள்ளே விடுமாறு கத்துகிறார்கள். வீட்டில் நான் மாத்திரம் தனியா இருக்கிறேன், தயவுசெய்து யாரையாவது அனுப்புவீங்களா?
10 நிமிடங்களின் பின்னர்.
நாங்கள் கிருத்திகாவிடம் கதைக்கவேணும். அவவுக்காக ரஞ்சன் ஒரு விசயம் சொன்னவர்.
ஏன் இங்கு இப்பிடி வந்து கத்துறீங்கள்?" அங்கு ஒருவரும் வீட்டில் இல்லை. இங்கிருந்து போய்விடுங்கள்.
இவ்வளவு இலகுவாக எங்களால் மின்சாரத்தைத் துண்டிக்கலாம் என்றால், வேறு எதையும் செய்ய நாங்கள் தயங்கமாட்டோம். இதை நீ கிருத்திகாவிற்கு சொல்லிவிடு. எங்களை இங்கு திரும்பி வர வைக்க வேண்டாம் என்பதையும் கிம்ஹானியை விட்டு விலகி இருக்குமாறும் அவளுக்குச் சொல்.
என்னால் இப்ப பொலீசைக்கூட கூப்பிட முடியாது. அவர்களுக்கு என்ன என்று சொல்லுறது? நான் ஒரு தன்னினச் சேர்க்கையாளன் என பொலிசுக்கு தெரிந்தால் அவர்கள் எனக்கு இன்னும் கூடுதலாக தொல்லை கொடுப்பார்கள். அவர்கள் நிலைமையை இன்னும் மோசமாக்கி விடுவார்கள். நானே என்னை பாதுகாத்துக் கொள்கின்றேன்.







பெண்களுக்கு எதிரான எல்லா வகையான பாகுபாடுகளையும் அகற்றுவது தொடர்பான ஐக்கிய நாடுகளின் உடன்டிக்கையில் (CEDAW) இலங்கை 1980ம் ஆண்டு கைச்சாத்திட்டது. இவ்வுடன்படிக்கையில் கைச்சாத்திட்ட நாடுகள் யாவும் பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் அகற்றுவதற்குத் தம்மை அர்ப்பணித்துள்ளன. சமமற்ற முறையில் நடத்துதல், பெண்களுக்கு ஊறு விளைவிக்கின்ற அல்லது அவர்களது உரிமைகளை அல்லது மகிழ்ச்சியை இல்லாதொழிக்கின்ற எத்தகைய ஒரு செயலும் பாகுபாடு எனப் பொருள்படும். ஆண்களும் பெண்களும் மனித உரிமைகளையும் சுதந்திரங்களையும் சமமாக அனுபவிக்க வேண்டும். CEDAW இல் கைச்சாத்திட்டுள்ள எல்லா நாடுகளும் வழமைக்கு ஒவ்வாத வகையில் அமைந்துள்ள ஆண்களினதும் பெண்களினதும் வகிபாகங்களை நிறுத்தும் வகையில் சமூக, கலாச்சார பாங்குகளை முயற்சித்து மாற்றவேண்டும் என உறுப்புரை 5(a) கூறுகின்றது ஆகையால், இது ஆண்களினதும் பெண்களினதும் பாலியல் நோக்குநிலைக்கும் பிரயோகிக்கப்பட வேண்டும்.



அத்தியாயம் 03

# தேனு




ஹாய் தேனு.
இதோ!
எனது பிறப்புச் சான்றிதழ், ஓய்வூதியம் பெறுவதற்கான படிவத்திற்கு தேவைப்பட்டது அல்லவா?
என்ன இது? உனது பாலினம் (ஜென்டர்) ஒரு இடத்தில் பெண் என்றும் இன்னொரு இடத்தில் ஆண் என்றும் இருக்குதே?
அதுவா? ஏனென்றால் நான் எனது பிறப்புச் சான்றிதழை மாற்றிக்கொண்டேன்.
அவ்வாறு ஏன் செய்தாய்?
நான் ஒரு திருநங்கை.
நான் பிறந்த போது எனது உடலைப் பார்த்து எல்லோரும் நான் ஒரு பெண் எனக் கூறினர்.
ஆனால் நான் ஒரு ஆண் என்பது எனக்குத் தெரியும்.
எனவே நான் ஒரு ஆணாக எனது பாலை மாற்றிக்கொள்ள தீர்மானித்து சான்றிதழையும் மாற்றிக்கொண்டேன்.
என்ன? அதெப்படி சாத்தியமாகும்?
இது இயற்கைக்கு மாறானது.
நான் இந்த பால் மாற்றத்துக்கு பிறகுதான் மிகவும் சாதாரணமான வாழ்க்கையை வாழ்கிறேன்.
இப்பதான் நான் நானாக வாழ்கிறேன்.
ம்ம்ம்....சரி.
இப்ப இங்க இருந்து போறியா? எனக்கு சில வேலை இருக்கு.




அடுத்த நாள்
ஹாய் நண்பர்களே, என்ன பரபரப்பு?
ஒன்றுமில்லை.
என்ன நண்பர்களே..எதைப் பார்த்துச் சிரிக்கிறீர்கள்?
இல்லை... ஒன்றுமில்லை.
நீ யாரென்று ரொஹான் எங்களுக்கு கூறினார்.
அருவருப்பாக இருக்குது!
வாங்க இங்கிருந்து நாங்க போய்விடுவோம்.
இவனையோ,
இவளையோ,
எதனையோ விட்டு விட்டுப் போய்விடுவோம்.



தேனு, நான் உனது ஆவணங்களை முழுமையாக வாசித்தேன், எல்லாமே சரியாகத்தான் இருக்கிறது. சிறப்பாக வேலை செய்துள்ளாய்.
றொஹான் முழுமையாக பார்த்தவுடன் உனது ஆவணங்களை தலைமை காரியாலத்திற்கு அனுப்பலாம்.
நன்றி விஜய்.
தேனு... உன்னைப்பற்றி றொஹான் சொன்ன பிறகு மற்ற அலுவலகர்களால் இன்னும் உனக்கு பிரச்சினைகள் இருக்கா?
ஆமாம்,
உங்களைத் தவிர, மற்றைய எல்லோரும் என்னை புறக்கணிக்கின்றார்கள்.
எனக்குத் தெரியும், றொஹான் திருநங்கைகளுக்கு எதிரானவர் (டிரான்ஸ்.ஃபோபிக்) என்று.
ஆனால் மற்றையவர்கள் இப்படி நடந்துக்கொள்வார்கள் என நான் எதிர்பார்க்கவே இல்லை.
* டிரான்ஸ்.ஃபோபிக்: திருநங்கைகளுக்கு எதிரான வெறுப்பு அல்லது பாரபட்சம்.
எனக்கு தெரியும்! உனக்காக வருந்துகிறேன் தேனு
எவ்வாறாயினும் உன் வேலையை நீ சிறப்பாகச் செய்கின்றாய், உனது மேலதிகாரி என்ற வகையில் நான் உனக்கு ஆதரவாக இருப்பேன்.
உனக்கு ஒரு நண்பனாகவும் நம்பக்கூடிய ஒருவராகவும் நான் உனக்குத் துணையாக இருப்பேன்.
இந்த அலுவலகத்தில் எல்லாருமே உனக்கு எதிராக இருக்கின்றார்கள்.






ஒரு வாரத்தின் பின்னர்
எனக்கு ஒன்றும் புரியவில்லையே! நான் உனது ஆவணங்கள் எல்லாவற்றையும் செக் பண்ணினேன், எல்லாமே சரியாகத்தான் இருந்தன.
ஹெட் ஒபீஸ் ஏன் உனது ஆவணங்களை பிழைகள் இருப்பதாக திருப்பி அனுப்பியுள்ளார்கள்? இது எப்படி நடந்தது?
விஜய், இவை நான் போட்ட இலக்கங்கள் இல்லை.
எல்லாவற்றையும் யாரோ மாற்றி இருக்கின்றார்கள்.
எங்கே, பார்ப்போம். அது முடியாத காரியமே!
உண்மைதான்.
இலக்கங்கள் மாறியுள்ளன.
இதை என்னிடம் விட்டுவிடு. இதன் அடி ஆழத்திற்கு போய் நான் கண்டுபிடிக்கின்றேன் என்ன நடந்தது என்று.
இது எப்படி நடந்தது?

அடுத்த நாள்







இலங்கை 1980 ஆம் ஆண்டில் ஐ.நா. பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள்அதொடர்பான சர்வதேச உடன்படிக்கையில் (ICESCR) கையெழுத்திட்டது. ICESCR உடன்படிக்கையில் கையெழுத்திட்ட நாடுகள், தமது நாட்டின் பிரசைகளுக்கு சிறந்த வேலை நிலைமைகளை அளிப்பதற்கு தம்மை அர்ப்பணம் செய்துள்ளன, (உதரணமாக, நியாயமான ஊதியம், கண்ணியமான வாழ்க்கை, பாதுகாப்பு, ஆரோக்கியம் என்பவற்றுடனான வேலை நிலைமைகள், சமத்துவமான வாய்ப்புக்களை மேம்படுத்துதல், ஓய்வெடுப்பதற்கு நியாயமான நேரம்). இனம், நிறம், பால்நிலை (பாலியல் நோக்குநிலையையும் உள்ளடக்கும்1), மொழி, மதம், அரசியல் அல்லது வேறு கருத்துக்கள், தேசிய அல்லது சமூக மூலம், சொத்து, பிறப்பு அல்லது ஏனைய அந்தஸ்த்துக்கள் என்ற பாகுபாடுகள் இன்றி, நாட்டின் எல்லாப் பிரசைகளுக்கும் சமத்துவமாக பிரயோகிக்கப்பட வேண்டும். வேலைத் தளத்தில் பாலியல் நோக்குநிலை, ஆண்-பெண் என்ற பேதத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படவோ அல்லது பாரபட்சமாக நடத்தப்படவோ கூடாது என்பதே இதன் கருத்தாகும்.

அத்தியாயம் 04

# சமனலி








LANKA HAR RE
NEW TAJ HOTEL
இங்க என்ன செய்கிறீங்கள்?
இவ்வளவு பேரா?
நாங்கள் ஒரு நண்பியை பார்க்க ஹொஸ்பிடலுக்கு போவதற்கு டுக் டுக் ஒன்றை நிறுத்த நிற்கின்றோம்.
நாங்கள் அனைவரும் ஒன்றாகப் போகின்றோம்.




எல்லோரும் ID யை காட்டுங்கள்?
இது எல்லாம் ஆண்களின் ID.
நாங்கள் எல்லோரும் திருநங்கையர்கள் சார்.
எல்லோரும் ஜீப்பில் ஏறுங்கள்.
ஏன்?
உங்கள் எல்லோரையும் கைது செய்கின்றோம்.


ஏன்? நாங்கள் யாரும் ஒரு தவறையும் செய்யவில்லையே!
எம்மை காரணமில்லாமல் கைது செய்ய முடியாது!
நாங்கள் ஒரு டுக் டுக்கை நிறுத்துவதற்காகவே நிற்கின்றோம்!
சார், எங்கள் ID யை மாற்றல் செய்முறையின் பின்னரே மாற்றுவதற்கு முடியும். அதுவரை இதையே பாவிக்க வேண்டும்.
அதெல்லாம் எனக்குத் தெரியாது, அதை நான் கவனத்திற் கொள்ளவும்மாட்டேன்.




நாங்கள் எல்லோரும் சிறையிலே ஒரு இரவை கழிக்கப்போவதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. அதுவும் ஆண்களின் சிறையில்.
நாங்கள் கைது செய்யப்பட்டது என் குடும்பத்தில் யாருக்காவது தெரியவந்தால், நான் ஏதாவது தப்பு செய்கின்றேன் என அவர்கள் நினைப்பார்கள்.
ஒரு நண்பரைப் பார்ப்பதற்கு மட்டுமே நாங்கள் முயற்சித்தோம்.
நீங்கள் அனைவரும் முறையற்ற நடத்தையில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
உங்கள் ஒவ்வொருவருக்கும் 100 ரூபா வீதம் அபராதம் விதிக்கின்றேன்.
அபராதத்தைக் கட்டி விட்டு நீங்க போலீஸ் நிலையத்தை விட்டுப் போகலாம்.






இலங்கை 1955 இல் ஐ.நா. சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை (UN Universal Declaration of Human Rights – UDHR) அங்கீகரித்தது. அனைத்து மனிதர்களும் சுதந்திரமாக பிறக்கிறார்கள், ஒரே உரிமைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்ற உறுதிமொழியுடன் UDHR ஆரம்பிக்கின்றது. UDHR ல் உள்ள உரிமைகள், இனம், நிறம், பாலினம் (பாலியல் நோக்குநிலை உட்பட) மொழி, மதம், அரசியல் அல்லது பிற கருத்து, தேசிய, அல்லது சமூகத் தோற்றம், சொத்து, பிறப்பு அல்லது வேறு ஏதேனும் அந்தஸ்த்துக்களைக் கவனத்தில் கொள்ளாது, நாட்டில் உள்ள மக்கள் அனைவர் மீதும் சமமாகப் பிரயோகிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. நாட்டு மக்கள் அனைவரும் சட்டத்தின் முன் சமமாக நடத்தப்பட வேண்டும் எனவும், பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் உறுப்புரை 7 கூறுகின்றது. எவராவது நியாயமற்ற முறையில் கைது செய்யப்படவோ, தடுத்து வைக்கப்படவோ அல்லது நாடுகடத்தப்படவோ கூடாது என உறுப்புரை 9 கூறுகின்றது.

சர்வதேச மன்னிப்புச் சபை மனித உரிமைகளுக்கான ஒரு உலகளாவிய இயக்கமாகச் செயற்படுகின்றது. ஒரு மனிதனுக்கு அநீதி இடம்பெறுகின்ற போது, அது எம் அனைவரையும் பாதிக்கின்றது.


CONTACT US

info@amnesty.org

JOIN THE CONVERSATION

www.facebook.com/AmnestySouthAsia

@amnestysasia




மஞ்சு, அவரது பாலியல் நோக்கின் காரணமாகவும், சமன்மலி, அவளது பாலியல் அடையாளம் காரணமாகவும் பொலிஸாரின் துஷ்பிரயோகத்திற்கு ஆளானார்கள். கிருத்திகாவின் உரிமைகள் சட்டத்தினால் பாதுகாக்கப்படாததனால், அவள் துஷ்பிரயோகத்திற்கும் துன்புறுத்தலுக்கும் ஆளானாள். தேனு அவனது பால் அடையாளத்தின் விளைவாக, வேலை செய்யுமிடத்தில் துன்புறுத்தலுக்கும் அதிகாரிகளின் அச்சுறுத்தலுக்கும் ஆளானான்.

பிரித்தானியர் இலங்கையைக் குடியேற்ற நாடாக மாற்றிய போது, 1883 ம் ஆண்டு அறிமுகம் செய்த சட்டம், சமபால் ஈர்ப்பில் நாட்டம் கொண்ட பெண் (LESBIAN) , சமபால் ஈர்ப்பில் நாட்டம் கொண்ட ஆண் (GAY) ஈர்பால் ஈர்ப்பாளர்கள் (BISEXUAL), திருநங்கையர் (TRANSGENDER) இடைப்பால் (INTERSEX) - (LGBTI) ஆகிய தன்மை கொண்ட மனிதர்களை அநீதியான முறையில் இலக்கு வைப்பதற்கும் பாகுபாடு காண்பிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. இது சட்ட விரோதமானது என அரசியல்திட்ட ஏற்பாடுகள் தெளிவாகக் குறிப்பிட்ட போதிலும், LGBTI குழுவினர், அவர்களது பாலியல் நோக்கு, பாலியல் அடையாளம் என்பன காரணமாக பாகுபாடு, துன்புறுத்தல் என்பவற்றுடன் பலாத்காரத்திற்கும் கூட முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இந்த வினோதமான பண்புகளைக் கொண்ட உண்மையான கதைகள், சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கையில் LGBTI மக்களுடன் நடத்திய நேர்காணலில் இருந்து பெறப்பட்டனவாகும்.


INDEX: ASA 37/1477/2019
DECEMBER 2019
LANGUAGE: TAMIL
amnesty.org